## பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ சார்வரி வருடம் ஆனி மாதம் 16–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு ஜுன் 30ம் தேதி) செவ்வாய் கிழமை காலை 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சுப்பையா,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**பொருள் எண்..1**

இந்நகராட்சி அலுவலகத்திற்கு 2020–21–ம் ஆண்டிற்கு தேவையான புத்தகங்கள், படிவங்கள் மற்றும் பதிவேடுகள் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனம் மற்றும் அரசு சார்பு கூட்டுறவு துறை நிறுவனம் மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.15,00,000/–க்கு (ரூபாய் பதினைந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. அனுமதிக்கலாம்.
(ந.க.எண்..1514/2020/டி2)

**தீர்மானஎண்.. 476 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..2**

பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசுக்கள் உருவாகி அதனால் பொது மக்களுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு (DBC) பணிகள் மேற்கொள்ள துப்புரவு கோட்டம் 1,2,3க்கும் சேர்த்து 60 நபர்கள் அமர்த்திக்கொண்டு (01.07.2020 முதல் 31.08.2020 முடிய) உள்ள காலத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர், தஞ்சாவூர் அவர்களின் விலைவிகிதப்படி ஊதியம் வழங்கவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.14,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், இப்பணிகளை மகளிர் சுய உதவிக்குழுக்கான கோட்டம்–1க்கு சமத்துவ மகளிர் சுய உதவிக்குழு, ஆனைவிழுந்தான் குளத் தெரு, பட்டுக்கோட்டை கோட்டம்–2–க்கு அதிர்ஷ்ட லெட்சுமி மகளிர் சுய உதவிக்குழு, வெண்டாக்கோட்டை ரோடு, வளவன்புரம், பட்டுக்கோட்டை கோட்டம்–3–க்கு அம்மன் சுய உதவிக்குழு, கோட்டை அல்லா கோவில் தெரு, பட்டுக்கோட்டை மூலம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு..** | மேற்படி செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண்..4032/2019/எச்1) |

**தீர்மானஎண்.. 477 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு சம்மந்தமான பதிவுகளானது புதிய இணையதளம் வழியாக கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுவரும் பணிக்கு நகர்மன்றம் தீர்மான எண்..36, நாள்.. 30.03.2017 நகர்மன்ற அனுமதி வழங்கிய உரிம காலம் 28.02.2018 உடன் முடிவடைவதால், இப்பணியை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்..369, நாள்.. 28.3.2018 வரை அனுமதி வழங்கிய உரிம காலம் 31.3.2019 உடன் முடிவடைவதால், இப்பணியினை மேலும் ஓராண்டிற்கு மேற்கொள்ளும்பொருட்டு நகர்மன்ற தீர்மான எண்..60, நாள்.. 31.05.2019ன்படி அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.03.2020உடன் முடிவடைவதால், மேலும் நீட்டிப்பு செய்வதற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..432, நாள்.. 30.03.2020ன்படி, 1.4.2020 முதல் 30.06.2020 வரை அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.06.2020 உடன் முடிவடைவதால் இப்பணிக்கான உரிமக் காலத்தினை 01.07.2020 முதல் 31.08.2020 வரை 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 30.06.2020 உடன் நிறைவடைவதால் 01.07.2020 முதல் இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020–21–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும், பொது மக்கள் நலன் கருதி பிறப்பு இறப்பு சான்றுகளை கணினியில் பதிவேற்றம் செய்து உடன் சான்று வழங்க ஏதுவாக இப்பணியின் முக்கியத்துவம் கருதி நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகையினை பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்..839/16/எச்1) |

**தீர்மானஎண்.. 478 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..4**

நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..15, நாள்.. 29.1.2016ன்படி இந்நகர எல்லைக்குட்பட்ட 33 வார்டுகளில் 20 வார்டுகளில் மட்டும் அன்றாட துப்புரவுப்பணி மேற்கொள்வதற்கு தனியார் சுய உதவிக்குழுக்களான பாரதம் சுய உதவிக்குழு, சமுத்திரம் சுய உதவிக்குழு, டாக்டர் அம்பேத்கார் சுய உதவிக்குழு, தூய்மை இந்தியா சுய உதவிக்குழு மற்றும் சுதந்திரம் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் 94 நபர்கள் கொண்டு துப்புரவுப் பணி மேற்கொண்டதன் உரிம காலம் 31.1.2017 உடன் முடிவடைந்ததன் பொருட்டு நகர் மன்றம் தீர்மானம் எண்..9, நாள்..31.1.2017ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிமம் நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 31.1.2018 உடன் முடிவடைவதாலும், மேற்படி 5 சுய உதவிக்குழுக்கள் தங்களது உரிம காலத்தை அதே ஊதிய விகிதத்தின்படி மேலும் நீட்டிப்பு செய்து உத்திரவு வழங்க கடிதத்தின் வழியே தெரிவித்துள்ளனர். தற்பொழுது தூய்மை இந்தியா திட்ட பணிகள் நகரின் விரிவாக்க பணிகள், திடக்கழிவு மேலாண்மை திட்ட பணிகள் போன்றவற்றிற்காக பணியாளர்களின்

தேவை நிமித்தம் காரணமாக இரண்டு மாதத்திற்கு மட்டும் தற்காலிகமாக மேற்படி தனியார் சுய உதவிக்குழு பணியாளர்கள் மூலம் துப்புரவுப் பணி மேற்கொள்ள நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..322, நாள்..31.1.18ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிம காலம் 31.5.2018 உடன் முடிவடைவதால் அன்றாட பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி 1.6.2018 முதல் 31.7.2018 வரை கூடுதலாக இரண்டு மாதத்திற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றத் தீர்மான எண்..430, நாள்.. 29.5.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக் காலம் 31.7.2018உடன் முடிவடையும் பொருட்டு பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.8.2018 முதல் 30.09.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்யப்பட்டது. இதன் உரிம காலம் 30.9.2018 உடன் முடிவடைவதன்பொருட்டு மேலும் கூடுதலாக இரண்டு மாதத்திற்கு 1.10.2018 முதல் 30.11.2018 வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்ற தீர்மானம் எண்..502, நாள்.. 20.9.2018ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் உரிம காலம் 30.11.2018 உடன் முடிவடைய உள்ளதன் பொருட்டு கூடுதலாக 2 மாதத்திற்கு 1.12.2018 முதல் 31.01.2019 வரை அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்..560, நாள்.30.11.2018ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.1.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு கூடுதலாக 5 மாதத்திற்கு 1.4.2019 முதல் 31.8.2019வரை மட்டும் உரிமத்தினை நீட்டிப்பு செய்தும், அதே விலைவிகிதத்தில் உரிமத்தினை நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தனது தீர்மான எண்.73, நாள்.31.05.2019ன்படி அனுமதி வழங்கி உரிமக்காலம் 31.8.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மான எண்.312, நாள்.13.11.2019ன்படி கூடுதலாக 4 மாதத்திற்கு 01.09.2019 முதல் 31.12.2019வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 31.12.2019உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, நகர்மன்றம் தனது தீர்மான எண்.419, நாள்..25.02.2020–ன்படி கூடுதலாக 4 மாதத்திற்கு 01.01.2020 முதல் 30.04.2020வரை உரிமத்தினை நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.04.2020உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, மேலும் கூடுதலாக நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..443, நாள்.. 30.04.2020–ன்படி 01.05.2020 முதல் 30.06.2020வரை 2 மாதத்திற்கு நீட்டிப்பு செய்து அனுமதி வழங்கிய உரிமக்காலம் 30.06.2020 உடன் நிறைவடைந்ததன் பொருட்டு, பொது சுகாதாரப் பணியின் அத்தியாவசியம் கருதி 01.07.2020 முதல் 31.08.2020வரை 2 மாதத்திற்கு நீட்டிப்பு செய்வதற்கும், இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.30.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) தனியார் சுய உதவிக்குழுக்களின் உரிம காலம் முடிவடைந்ததன் பொருட்டும், பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி மேலும் 01.07.2020 முதல் 31.08.2020வரை வரை 2 மாதங்களுக்கு உரிமத்தினை நீட்டிப்பு செய்திடவும், 2020–2021 –க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தினக்கூலி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஊதியத்தின்படி வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அன்றாட பொது சுகாதாரத்தின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். |
| | 4) உத்தேச செலவு தொகை ரூ.30.00 லட்சத்திற்கு பொது நிதி மூலம் பணி மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7150/2015/எச்1) |

**தீர்மானஎண்.. 479 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் JCB மற்றும் கனரக வாகனங்களை இயக்குவதற்கு 1 ஓட்டுநர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகித அடிப்படையில் விவேகானந்தா தொண்டு நிறுவனம், பட்டுக்கோட்டை அவர்கள் மூலம் பெற்று ஓட்டுநர் பணிபுரிந்திட நகர்மன்றம் தீர்மான எண்..122, நாள்.. 10.06.2016ன்படி மேலும் ஓராண்டிற்கு உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திட புதுப்பித்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. மேலும் உரிமத்தினை ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்து நகர்மன்றம் தீர்மான எண்..144, நாள்.. 19.06.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டது. இதன் உரிமக்காலம் 31.03.2019உடன் முடிவடைவதால், இப்பணிக்கான உரிமக் காலத்தினை நகர்மன்றம் தீர்மான எண்..74, நாள்.. 31.05.2019ன்படி 1.4.2019 முதல் 31.3.2020 முடிய ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்தது 31.03.2020உடன் முடிவடைவதால், நகர்மன்றம் தனது தீர்மானம் எண்..431, நாள்..30.03.2020–ன்படி இப்பணியின் உரிமக்காலம் 01.04.2020 முதல் 30.06.2020 முடிய நீட்டிப்பு செய்தது 30.06.2020 உடன் முடிவடைவதால், இப்பணியின் அத்தியாவசியம் கருதி உரிமக்காலம் மேலும் 01.07.2020 முதல் 31.08.2020 வரை 2 மாதங்களுக்கு நீட்டிப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) மாவட்டஆட்சித்தலைவர் அவர்களது தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இப்பணிக்கான உரிம காலம் 30.06.2020 உடன் நிறைவடைவதால் 01.07.2020 முதல் இரண்டு மாத காலத்திற்கு ஒப்பந்த உரிம காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், இப்பணிக்கான தினக்கூலி ஊதியத்தினை 2020–21–க்கான மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தரப்படுத்தப்பட்ட ஊதிய விகிதத்தின்படி வழங்கிடவும்,அன்றாட திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணியினை அத்தியாவசியம் கருதி மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) அதற்காகும் உத்தேச செலவினத் தொகையினை பொது நிதி மூலம் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்..6517/14/எச்1) |

**தீர்மானஎண்.. 480 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..6**

இந்நகராட்சியில் 2020–21–ம் நிதியாண்டிற்கு சொத்து வரி, தொழில் வரி, காலிமனை வரி, குடிநீர் கட்டணம், ஆகியவற்றிற்கான கேட்பு அறிவிப்புகள் வரிவிதிப்புதாரர்களுக்கு வழங்குவதற்கு, மேற்படி கேட்பு அறிவிப்பு நோட்டீஸ் அச்சிடுவதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..1985/2012/அ1) |
|---|---|

**தீர்மானஎண்.. 481 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..7</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களுக்கு 2007–08 முதல் 2011–12ம் மற்றும் 2012–13 முதல் 2014–15ம் ஆண்டு வரை உள்ள காலத்திற்கான சேவைவரித்தொகை செலுத்ததாது தொடர்பாக மத்திய கலால் இணை ஆணையர் அவர்களால் பிறப்பிக்கப்பட்ட சப்கா விகாஸ் திட்டத்தின் மூலம் சேவைவரிக்கான வட்டி மற்றும் அபராததொகை ஆகியவைற்றை தள்ளுபடி செய்து சேவைவரித்தொகையில் 30சதவீதம் மட்டும் தொகை செலுத்த இணையதளம் மூலம் விண்ணப்பம் அளித்து சேவைவரி அலுவலகத்தில் மேற்படி காலத்திற்கான தொகை செலுத்தியதற்கான செலான்களை சேவைவரி அலுவலகத்தில் Filing, மற்றும் Hearing ஆட்டன் செய்ததற்கான ஆடிட்டர் கட்டணம் ரூ22,700/–ஐ திரு.ஆர்.ரவிச்சந்திரன், ஆடிட்டர், தஞ்சாவூர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..6478/2014/அ2) |

**தீர்மானஎண்.. 482 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..8</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான அஞ்சா நெஞ்சன் அழகிரி நாளங்காடி கடை எண்..53 திரு.எம்.சுந்தரமகாலிங்கம் என்பவர் பெயரில் வாடகை உரிமம் இருந்து வருகிறது. தற்பொழுது மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். எனவே வருவாய் ஆய்வாளரின் 16.06.2020–ன் குறிப்பின்படி மேற்படி கடைக்கு 30.06.2020–வுடன் ஏல உரிமத்தை ரத்து செய்யவும் மற்றும் மேற்படி கடையை பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..329/2015/அ2) |

**தீர்மானஎண்.. 483... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..9</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான அஞ்சா நெஞ்சன் அழகிரி நாளங்காடி கடை எண்..54 திரு.எஸ்.சரவணன் என்பவர் பெயரில் வாடகை உரிமம் இருந்து வருகிறது. தற்பொழுது மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். எனவே வருவாய் ஆய்வாளரின் 16.06.2020–ன் குறிப்பின்படி மேற்படி கடைக்கு 30.06.2020–வுடன் ஏல உரிமத்தை ரத்து செய்யவும் மற்றும் மேற்படி கடையை பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..329/2015/அ2) |

**தீர்மானஎண்.. 484 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைக்காக, நகராட்சி வாகனத்திற்கு கிருமி நாசினி தெளிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்ட பெட்ரோல் தொகை ரூ. 37,299/- மதிப்பீட்டில் எம்.கோதண்டபாணி ஏஜென்சிஸ், பட்டுக்கோட்டை நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 485 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..11**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு பணிக்கு போது தேவையான Hand Sanitizer – 2 எண்ணம் மற்றும் 5 லிட்டர் Sanitizer Liquid – 20 எண்ணம் தொகை ரூ, 64,640/- மதிப்பீட்டில் Staging Elements, Chennai, நிறுவனத்திடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டமைக்கு மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 486 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..12**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்கு தேவையான கிருமி நாசினிகளான, நீர்த்த சுண்ணாம்பு ரூ.42,500/- மதிப்பீட்டில் நகராட்சி ஒப்பந்தாரரிடமிருந்து தமிழ்நாடு நகராட்சி சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பெறப்பட்டது மன்றத்தின் பதிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | பதிவு செய்யலாம்.<br>(ந.க. எண்.1144/2020/எச்1) |

**தீர்மானஎண்.. 487 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>பொருள் எண்..13</u>

பட்டுக்கோட்டை நகராட்சி சுகாதார பிரிவு ஆய்வாளர் கோட்டம்–III ன் கீழ் உள்ளடக்கிய வார்டு எண்.18 குரும்பக்குளம் கழிவறை, வார்டு எண்.22 கே.ஒ.என் பாளையம் கழிவறை, வார்டு எண்.23 அண்ணா நகர் வாம்பே கழிவறை, அண்ணா நகர் நம்ம டாயிலெட் ஆகிய கழிவறைகளுக்கு தண்ணீர் வசதி , மின்சார வசதி, பழுதடைந்துள்ள கழிவறை கதவுகளை மாற்றி அமைத்தல், மின்மோட்டார் பழுது சீர்செய்தல் மற்றும் இதர அத்தியவாசிய பணிகளுக்கு 13.01.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| **வ.எண்** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்த சதவீதம்** |
|---|---|---|
| 1) | எஸ்.கணேசன்<br>பட்டுக்கோட்டை | மதிப்பீட்டை விட 4.70 % அதிகம் |
| 2) | கே.எடிசன்,<br>பட்டுக்கோட்டை | மதிப்பீட்டை விட 8.54 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் அவர்களிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்பேரில், திரு.எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாட்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | எஸ்.கணேசன்<br>பட்டுக்கோட்டை | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| 2) | கே.எடிசன்,<br>பட்டுக்கோட்டை | மதிப்பீட்டை விட 8.54 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள திரு.எஸ்.கணேசன், ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 0.02% குறைவாக உள்ளது. மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி தனி அலுவலரது அதிகாரத்தை பயன்படுத்தி முதல் அழைப்பில் மதிப்பீட்டைவிட குறைவாக உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண்.2.7.2 ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மன்றம் அனுமதிக்கலாம்.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.5277/2019/இ.1)

**தீர்மானஎண்.. 488 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..14**

பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் –2019–20ன் கீழ் பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு தானியங்கி படுக்கை 3 எண்ணிக்கை மற்றும் ஆட்களை கொண்டு இயங்கும் 2 எண்ணிக்கை படுக்கை வசதி அமைத்தல் பணிக்கு 25.06.2020 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு தானியங்கி படுக்கை 3 எண்ணிக்கை மற்றும் ஆட்களை கொண்டு இயங்கும் 2 எண்ணிக்கை படுக்கை வசதி அமைத்தல் பணி | ரூ.3,00,000/– | ஜி.செந்தில் பட்டுக்கோட்டை | 1.28 % குறைவு |
| | | | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 1.70 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை ஜி.செந்தில், ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்ஒப்பந்தப்புள்ளியானது எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே ஜி.செந்தில், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது ஒப்பந்தப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள ஜி.செந்தில், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணிக்கான செலவினத்தினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் (2019–20) கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம். |
| | 3) பணியின் அவசர, அவசியம் கருதி உடன் மேற்கொள்ளும் பொருட்டு தனி அலுவலர் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5134 /2019/இ.1) |

**தீர்மானஎண்.. 489 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**<u>பொருள் எண்..15</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 14 TASMAC கடைகள் முன்பு பெயிண்ட் மூலம் சமூக இடைவெளி வளையக்கோடு அமைக்கும் பணிக்கு 07.05.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 14 TASMAC கடைகள் முன்பு பெயிண்ட் மூலம் சமூக இடைவெளி வளையக்கோடு அமைக்கும் பணி | ரூ.29,000/– | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.27 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 0.32 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது கே.எடிசன், ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை கொரோனா நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1400 /2020/இ.1) |

**தீர்மானஎண்.. 490 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**பொருள் எண்..16**

பட்டுக்கோட்டை நகராட்சி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கைகழுவும் வகையில் 4 இடங்களில் Wash basin அமைத்திடும் பணிக்கு 29.05.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பட்டுக்கோட்டை பேருந்து நிலையத்தில் தஞ்சாவூர் மார்க்கம் , இராமநாதபுரம் மார்க்கம் மற்றும் நகர பேருந்து மார்க்கம் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் பகுதிகளில் சுமார் 11 எண்ணிக்கையிலான Wash basin தண்ணீர் வசதியுடன் ஏற்படுத்தி தரும் பணி | ரூ.65,000/— | எஸ்.கணேசன் பட்டுக்கோட்டை | 0.33 % குறைவு |
| | | | கே.எடிசன், பட்டுக்கோட்டை | 1.50 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி விகிதத்தினை எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் , பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ளார். இவ்விலைப்புள்ளியானது கே.எடிசன, ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளி விகிதத்தினை விட குறைவாக உள்ளது. ஆகவே எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர், பட்டுக்கோட்டை அவர்களது விலைப்புள்ளியை ஏற்கும் பொருட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1)வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விலைவிகிதம் கொடுத்துள்ள எஸ்.கணேசன் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2) இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு –15ன் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் செலவினத்தை கொரோனா நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.1399 /2020/இ.1) |

**தீர்மானஎண்.. 491 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

பொருள் எண்..17

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தலைவர் , தஞ்சாவூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.2107/2019/அ2, நாள்.04.06.2020—ன் படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2020—21ன் கீழ் பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பரிந்துரை செய்த பணியான பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு தானியங்கி படுக்கை 3 எண்ணிக்கை மற்றும் ஆட்களை கொண்டு இயங்கும் 2 எண்ணிக்கை படுக்கை வசதி அமைத்தல் பணிக்கு ரூ.3.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3,00,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்ட நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்படி பணியினை உடன் மேற்கொள்ளும் பொருட்டு தனி அலுவலர் முன்னனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.கஎண். 5134/2019/இ1) |

**தீர்மானஎண்.. 492 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

பொருள் எண்..18

இந்நகராட்சிக்கு சொந்தமான அஞ்சா நெஞ்சன் அழகிரி நாளங்காடி கடை எண்..52 திரு.எம்.சுந்தரமகாலிங்கம் என்பவர் பெயரில் வாடகை உரிமம் இருந்து வருகிறது. தற்பொழுது மேற்படி கடையை தொடர்ந்து நடத்த இயலாத காரணத்தால் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்ய தெரிவித்து விண்ணப்பித்துள்ளார். எனவே வருவாய் ஆய்வாளரின் 16.06.2020—ன் குறிப்பின்படி மேற்படி கடைக்கு 30.06.2020—வுடன் ஏல உரிமத்தை ரத்து செய்யவும் மற்றும் மேற்படி கடையை பொது ஏலம் விடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்..329/2015/அ2) |

**தீர்மானஎண்.. 493 ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

<u>பொருள் எண்..19</u>

14வது மத்திய நிதி ஆணையத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள ரூ.258.39 இலட்சத்திற்கு கீழ்கண்ட விபரப்படியான சாலைகள் பணி செய்திட தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு நகர்மன்ற தீர்மான எண்.345, நாள்.31.12.2019ன்படி அனுமதி பெறப்பட்டது.

| Sl. No. | W. No. | Name of Work | Type of Work (BT/ CC) | Length (in m) | Width in (in m) | Estimate Cost Rs. In Lakhs |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | Valavan puram North street | BT | 300.00 | 4.00 | 19.50 |
| 2 | 16 | Rajappa Nagar | BT | 340.00 | 4.00 | 20.30 |
| 3 | 24 | Boys School – Anthoniyar Kovil Link Road | BT | 380.00 | 4.00 | 13.30 |
| 4 | 27 | SMS Avenue Extension | BT | 340.00 | 4.00 | 22.10 |
| 5 | 27 | SMS Avenue Cross road | BT | 300.00 | 4.00 | 19.50 |
| 6 | 27 | Ganapathi Nagar, Sakthi Nagar | BT | 380.00 | 4.00 | 24.70 |
| 7 | 29 | Nadiyamman Nagar | BT | 210.00 | 4.00 | 13.65 |
| 8 | 29 | N.G.G.O Nagar | BT | 350.00 | 4.00 | 22.75 |
| 9 | 29 | R.V Nagar | BT | 600.00 | 4.00 | 21.00 |
| 10 | 30 | Pomalliyar Kulam | BT | 300.00 | 4.00 | 15.00 |
| 11 | 31 | P.S.S. Nagar | BT | 120.00 | 4.00 | 7.80 |
| 12 | 31 | Old Housing Unit Main Road | BT | 250.00 | 9.00 | 24.90 |
| 13 | 31 | Old Housing Unit Cross Road | BT | 285.00 | 4.00 | 20.50 |
| 14 | 31 | Letcha Thoppu | BT | 300.00 | 4.00 | 15.00 |
| | | | | 4455.00 | | 260.00 |

கணபதி மற்றும் சக்திநகர் ஆகியவற்றில் , அப்பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் மற்றும் கரிக்காடு பூங்கா நகர் குடியிருப்போர் நலச்சங்கம் சார்பாக சாலைப்பணி அமைத்திட மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் , மாவட்ட ஆட்சியர் தஞ்சாவூர், பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி ஆணையாளர் பட்டுக்கோட்டை ஆகியோருக்கு மனு அளித்ததன் பேரில் , விண்ணப்பதாரர் தெரிவித்துள்ள இடம் நேராய்வு செய்யப்பட்டதில் SMS avenue மட்டும் அங்கீகரிக்கப்பட்ட மனை பிரிவு என்றும் , சக்தி நகர் மற்றும் கணபதி நகர் ஆகியவை அங்கீகாரம் பெறப்படாத மனைப்பிரிவுகள் என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது.

எனினும், கணபதி நகர் மற்றும் சக்தி நகர் பகுதியில் உள்ள பொதுமக்கள் தங்கள் மனைகளை வரையறுக்கப்பட்ட மனைபிரிவுகளாக மாற்றிட அதற்குரிய கட்டணத்தை நகராட்சி அலுவலகத்தில் செலுத்திடுவோம் என உறுதி அளித்ததன் அடிப்படையில் மேற்கண்ட சக்தி நகர் மற்றும் கணபதி நகர் பகுதியில் 14வது மத்திய நிதி ஆணையத்தின் மூலம் சுமார் 380 மீட்டர் நீளத்திற்கு ரூ.24.70 இலட்சம் மதிப்பீட்டில் சாலை பணி மேற்கொள்ள பணி தேர்வு செய்யப்பட்டு 04.02.2020–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

இந்நிலையில் இன்றைய தேதி வரை அப்பகுதி மக்கள் போதிய எண்ணிக்கையில் தங்கள் மனைபிரிவுகளை முறைபடுத்திட முன்வராததால் , வார்டு எண்..27 சக்தி நகர் மற்றும் கணபதி நகர் பகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சாலை பணியினை ரத்து செய்து விட்டு அதற்கு மாற்றாக கீழ்கண்ட பகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட சாலை பணியினை , கீழ்கண்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளுவதற்கு தயார் செய்யப்பட்டுள்ள உத்தேச மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுச்சாலைப் பணியின் விபரம் :**

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வார்டு எண்.27 SMS avenue 4வது குறுக்குதெரு பகுதியில் தார் சாலை அமைத்தல் | 8.00 |
| 2. | வார்டு எண்.31 பழைய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதி 2வது குறுக்கு சாலையில் தார் சாலை அமைத்தல் | 9.50 |
| 3. | வார்டு எண்.31 பழைய வீட்டு வசதி வாரியம் குடியிருப்பு பகுதி 3வது குறுக்கு சாலையில் தார் சாலை அமைத்தல் | 7.20 |
| | **கூடுதல்** | **24.70** |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2) செலவினத்தினை 14வது மத்திய நிதி ஆணையம் மூலம் பணியினை மேற்கொள்ளவும் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.கஎண். 5135/2019/இ1) |

**தீர்மானஎண்.. 493(அ) ... அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ...**

**ஆணையர் / தனிஅலுவலர்**
**பட்டுக்கோட்டை நகராட்சி**